முருகப்பெருமான் துணை

**மகான் ஜனக மகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**18.02.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. கலியிலும் மாதரும சபை
கந்தனே படைத்து நன்கு
அழியாமை தரும் ஞானியாக
அரங்கனாக அவதாரம் நிகழ்த்தி இருக்க
2. இருக்கவே அரங்க ஞானியரின்
இணையில்லா பெருமை கூறி
கருத்தாக துல்லிய ஆசியை
கண்டுரைப்பேன் சோபகிருது சால் திங்கள்
3. திங்களிலே சஷ்டிதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 06 ம் நாள், 18.02.2024, ஞாயிற்றுக்கிழமை)
தேசிகன் கேட்க ஜனக மகரிஷியும்
ஓங்காரக் குடிலின் சிறப்பை உரைப்பேன்
ஓங்கார நாதம் முழங்க ஞானிகள்
4. ஞானிகள் பிரணவக் குடிலை
நாட்டிடுவேன் அலங்கரித்து வர
ஞானிகள் பூசையாக செய்யும்
ஞாலமதில் முழுமதி காலம் தானும்
5. தானுமே பிரணவக்குடில் நோக்கி
தரணியோர் வருகை புரிய
ஞானமுடன் தரும பலத்தையும்
ஞானிகளின் ஆசியும் பெற்று
6. பெற்றுமே தானென்ற ஆணவம்
பிறவிக் கருமவினை அனைத்தும்
உற்றதொரு கடந்து களைந்து
உலகினில் உயர் மக்களாவர்
7. அவனியில் மக்கள் அனைவரையும்
ஆற்றல் மிக்க ஞானவான்களாக
அவனியில் மாற்றம் செய்ய
ஆறுமுகன் அமைத்த பிரணவக்குடில்

8. குடிலின் வருகை தொடர்பு
குறைகள் கிரக கோளாறுகள்
இடர்கள் என்பதே அணுகா
எல்லா பாதுகாப்பும் தந்து மீட்கும்
9. மீட்கும் சாமானியர்களையும்
மேலான ஞானவான்களாக்கும்
ஆட்சி மாற்றம் தன்னையும்
ஆளுமையில் ஞானபலம் தரும்
10. தருகின்ற ஞான சபையாக
தணிகாசலன் இறங்கி அருளும்
பெருமை தருமம் மிகுந்தநல்
புண்ணிய சபையாக குடில் விளங்கி
11. விளங்கி உலக மாற்றத்தையே
விரைந்து முடிவு செய்யும்
களங்கமிலா சபையாக விளங்கி
கலியுகத்தையே ஞானயுகமாக்கும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–